Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 196/2025 PW-1**

Name : இராஜராஜசோழன்
Father / Husband name : காளியப்பன்
Village : மயிலம்
Age : 51
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 07.01.2026

Accused present. Both side counsel present.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மயிலம் காவல் நிலையத்தில் த.கா.1790 பணிபுரிகிறேன். 03.09.2018 ந் தேதி 19 மணிக்கு ஒலக்கூர் காவல் நிலையத்தில் த.கா. பணியிலிருந்தபோது உதவி ஆய்வாளர் நடராஜன் அவர்களுக்கு கிடைத்த தகவலின்படி நானும் காவலர் கணபதி, காவலர் டேவிட், காவல் உதவி ஆய்வாளர் ஆகியோர்கள் ரோந்து அலுவலாக கீழ்க்காரணை கிராமத்திலிருந்து ஏவலூர் செல்லும் வழியில் சென்றபோது எதிரில் வந்த 3630 நியுஆலன் டிராக்டர் எங்களை கண்டதும் ஓட்டுநர் தப்பி ஓடிவிட்டார். சம்பவயிடத்தை சென்று பார்த்தபோது அதில் 1 யூனிட் அளவில் ஆற்று மணல் இருப்பது தெரியவந்தது.அதனை உதவி ஆய்வாளர் 19.30 மணிக்கு நானும் காவலர் டேவி என்பவரும் மகசரில் கையொப்பம் செய்து வாகனத்தை நிலையத்திற்கு கொண்டுவந்தோம். நிலையம் வந்து குற்ற எண் 314/2018 u/s 379 IPC r/w 21(4) MMDR Act ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதுசம்மந்தமாக உதவி ஆய்வாளர் மற்றும் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க நடந்ததை சொன்னேன். என்னிடம் காட்டப்படும் ஆவணமான கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. 03.09.2018 அன்று எத்தனை ஊருக்கு ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் கீழ்க்காரணை வழியாக ஏவலூர் வரை சென்றோம். நாங்கள் கண்காணித்தபோது எத்தனை வானங்கள் அந்த வழியாக சென்றது என்றால் நினைவில்லை. கீழ்க்காரணை - ஏவலூர் சுமார் 10 ஊருக்கு செல்லும் சாலை என்றால் சரியல்ல, 3, 4 ஊருக்கு செல்லும் சாலை. அந்த சாலையில் அனைத்து வானங்கள் மற்றும் பொதுமக்கள் செல்லும் சாலை என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சி டேவிட் முதல்நிலைக்காவலர், கணபதி தலைமைக்காவலர், நடராஜன் உதவி ஆய்வாளர் என்றால் சரிதான். போலிசார் சாட்சிகளை தவிர பொதுமக்களை சாட்சியாக விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் வாகனத்தை ஓட்டுநர் யார் என்று எங்களுக்கு தெரியாது, உரிமையாளர் யார் என்று தெரியாது என்றால் சரிதான். 1 யூனிட் ஆற்று மணல் இருந்தது எவ்வாறு தெரிந்துகொண்டோம் என்றால் சுமாராக அளவை தெரிந்துகொண்டோம், உறுதியாக தெரியாது. எந்த வாகனத்தில் ரோந்துக்கு சென்றோம் என்றால் காவல் வாகனத்தில் சென்றோம்.

2. ரோந்துக்கு செல்லும்போது என்னென்ன எடுத்துச்சென்றோம் என்றால் நினைவில்லை. கைப்பற்றுதல் மகசரை காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல, சம்பயிடத்தில் தயார் செய்யப்பட்டது. கைப்பற்றுதல் முழுவதும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் அவ்வாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை, காவல் உதவி ஆய்வாளர் புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட பொய்யான வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசரை

காவல் நிலையத்தில் தயார் செய்து, அங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.